https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

08th SEPTEMBER 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 96

# ரணில்- சஜித் ஒன்றிணைய வேண்டும்



ரணில் விக்ரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோர் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் ருவான் விஜயவர்தன கூறியுள்ளார்.

நாடு அபிவிருத்தியடைய வேண்டுமென்றால் இந்த இணைவு அவசியம் என்று கூறிய அவர் இரு தரப்பிலும் இந்த இணைவை வீரும்பாத சிலர் உள்ளனர் என்றும் சொன்னார்.



நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக தேசிய அரசு ஒன்றை உருவாக்குவதுதான் ரணிலின் திட்டம் என்று அவர் மேலும் கூறினார்.

# 30 லட்சம் வாக்குகள் வீணாகும் ஆபத்து

வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் மற்றும் சிறையில் உள்ளவர்களுக்கு வாக்களிப்பதற்கான ஏற்பாடு செய்யாததன் காரணத்தால் சுமார் லட்சம் வாக்குகள் வீணடிக்கப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் கூறியுள்ளனர்.

இதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டிய நாடாளுமன்றம் இது விடயத்தில் கவனயீனமாக உள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது பாரிய மனித உரிமை மீறல்கள் என்று தேர்தல்கள் கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# வெளிநாடுகளுக்குக் கடத்தப்பட்ட இலங்கை நிதியை

## நாட்டுக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை



சட்டவிரோதமான முறையில் – கறுப்புப் பண வடிவில் வெளிநாடுகளில் இருக்கும் பணத்தை இலங்கைக்கு மீண்டும் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் சஜித் மற்றும் அனுர தரப்பு கூறியுள்ளது.

இதற்கான சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவந்து 6 மாதங்களுக்குள் அந்தப் பணத்தைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் எம்பி எரான் விக்ரமரத்ன கூறியுள்ளார்.

இதே நடவடிக்கையைத் தாமும் முன்னெடுக்கப் போவதாக தேசிய மக்கள் சக்தியின் சுனில் ஹந்துன்நெத்தியும் தெரிவித்துள்ளார்.

# எம்பிக்கள் 100 பேருக்குத் துப்பாக்கி

இதுவரை எம்பிக்கள் 100 பேர் அரசால் வாழங்கப்பட்ட இலவச கைதுப்பாக்கிகளை பெற்றுள்ளனர் என்று அறிய முடிகிறது.

இதற்கு மேலதிகமாக அவர்கள் இரண்டு கைதுப்பாக்கிகளை அரசிடம் பணம் கொடுத்து பெற்றுக்கொள்ள முடியும் என்று அரசு அறிவித்துள்ளது.

எம்பி பதவி முடிந்தால் அந்த இலவச துப்பாக்கியை மீண்டும் அரசிடம் ஒப்படைக்க வேண்டும்.பணம் கொடுத்துப் பெற்ற துப்பாக்கியை மீள வழங்கத் தேவை இல்லை.

# வாக்குச் சாவடிகளில் இடையூறு ஏற்படுத்தினால் துப்பாக்கிச் சூடு!

## பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு!

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் போது, வாக்குச் சாவடிகளில் இடையூறு விளைவிப்பவர்கள் மற்றும் கலவரங்களில் ஈடுபடுபவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த, பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக, தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

02 ▶

ஹரே கிருஷ்ணா

ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்

புது ஆலயத்திற்கான வர்ணபூச்சு வேலைகளும் மற்றும் முடிவு வேலைகளும் நடைபெற்று கொண்டிருக்கின்றன





ராதா கிருஷ்ணா



சீதா ராம்



ஸ்ரீ பாலாஜி



நரசிம்மர்

உயரமான கோபுரம் தசவதார மூர்த்திகள், பளிங்கு தரைகள் மற்றும் கண்கவர் வேலைபாடுகள்.



வர்ணபூச்சுக்கான மதிப்பீடு
ரூபா.5,000,000/= (5 மில்லியன்)
அன்பான பக்தர்களே நீங்களும்
இச்சேவையில் பங்கு பற்றி
விரைவில் கும்பாபிஷேகம் செய்து
பகவானின் அருளை பெறுவோமாக.

Bank Detials

Commercial Bank
Bank Branch - Kotahena Branch
Account Name - ISKCON -TEMPLE FUND
Account No. - 1120017042
Swift Code - CCEYLKLX

Hatton National Bank
Bank Branch - Jempettah Street
Account Name - ISKCON
Account No. - 207010000891
Swift Code - HBLILKLX

சர்வதேச கிருஷ்ண பக்தி கழகம்
ஸ்தாபக ஆச்சாரியார்: அருட்திரு அ. ச. பக்தி வேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபுபாதா
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
+94 772288166 ☎ +94 112433325
188, புதுச்செட்டித் தெரு, கொழும்பு- 13
E-Mail: info@iskconsrilanka.org Web: www.iskcon.lk
ISKCON SRI LANKA

புது சுடர்
www.puthusudar.lk
2024 SEPTEMBER 08 - SUNDAY

# எம்பிக்களின் சொந்த வீடுகள் வாடகைக்கு

எமது வாக்குகளை பெற்று - எம்மை ஏமாற்றி எமது தலைவர்கள் செய்கின்ற ஊழல் , மோசடிகளை இனிமேலும் பார்த்துக்கொண்டு இருக்க முடியாமல்தான் நாம் ஜேவிபிக்கு வெளிப்படையாக ஆதரவு வழங்கத் தொடங்கியுள்ளோம் என்கிறார்கள் ஜேவிபியை ஆதரிப்பவர்கள்.

இவர்களை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் வேறு வழி இல்லாமல் நாம் ஜேவிபியை ஆதரிக்கவில்லை.

இவர்களின் திருட்டுக்களுக்கு எதிராக அவர்களின் அரசியல் அமைந்துள்ளதால்தான் அவர்களை நாம் நாடுகிறோம் என்கிறார்கள் அவர்கள்.

ஒருவேளை, ஜேவிபியும் இப்படியான கட்சியென்றால் அவர்களை நாங்கள் ஏறெடுத்தும் பார்க்கப்போவதில்லை.

இந்தத் திருட்டுக்கள் தொடர்பில்- அவற்றை ஒழிப்பது தொடர்பில் மக்கள் என்ன நிலைப்பாட்டில் இருக்கிறார்களோ அதே நிலைப்பாட்டில் ஜேவிபியும் இருப்பதால்தான் அவர்களை நாம் ஆட்சியில் அமர்த்த வேண்டும் என்று கூறுகிறோம் என்கிறார்கள்.

அப்படியான மோசடிகளில் ஒன்றுதான் எம்பிக்களுக்கான- அமைச்சர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்கள்.

அமைச்சுப் பதவிகளில் அமர்ந்து- கொள்ளையடித்து கொழும்பில் பல கோடி ரூபா பெறுமதியான மாடி வீடுகளை அமைத்துள்ள அமைச்சர்கள் ஆந்த வீடுகளில் தங்குவதில்லை.

அவற்றை பல லட்சம் ரூபாவுக்கு வாடகைக்குக் கொடுத்துவிட்டு அரசால் வழங்கப்படும் உத்தியோகபூர்வ இல்லங்களில்தான் தங்குகின்றனர்.

நீர் கட்டணம்-மின் கட்டணம்-தொலைபேசி கட்டணம்-வீட்டு பராமரிப்பு செலவு என மாதாந்தம் லட்சக் கணக்கில் அரசால் பணம் செலவிடப்படுகிறது.

இது எவ்வளவு பெரிய அநியாயம்.

மக்களின் பணத்தைக் கொள்ளையடித்து வீடு கட்டியது போதாதென்று அரச இல்லங்களை பெற்று அதற்கும் மக்களின் பணமே செலவிடப்படுகிறது.

கொழும்பு BMICH பக்கம் முஸ்லிம் அரசியல்வாதி ஒருவரின் பெரிய வீடு இருக்கிறது.

ஆனால், அதை அவர் அவருடன் நெருக்கமான யாருக்கும் காட்டியது கிடையாது.

அதை அவர் பல லட்சம் ரூபாவுக்கு வாடகைக்குக் கொடுத்துவிட்டு அரச இல்லத்தில்தான் குடியிருக்கிறார்.

அதிகமான அரசியல்வாதிகள் இப்படித்தான்.

இது நியாயம்தானா? இதைத் தடுக்க வேண்டாமா என்று நினைப்போருக்கு ஜேவிபியிடம் மாத்திரம்தான் அதற்குத் தீர்வு இருக்கிறது என்கிறார்கள் ஜேவிபி ஆதரவாளர்கள்..

அதுதான்.....!!!

கொழும்பில் சொந்த வீடுகளை வைத்திருப்போருக்கு அரச வீடுகள் வழங்கப்படமாட்டாது என்ற ஜேவிபியின் அறிவிப்பு.

இதுதானே தேவை. இப்படிப்பட்ட மாற்றம்தானே தேவை. சிந்தித்து முடிவெடுங்கள் என்கிறார்கள் ஜேவிபி ஆதரவாளர்கள் .

## ரணில் விக்ரமசிங்க வெற்றிபெற்று தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வடக்கை அபிவிருத்தி செய்வார்

### மாவை சேனாதிராஜா நம்பிக்கை தெரிவிப்பு!



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெற்றி பெற்று தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வடமாகாண அபிவிருத்தியை உறுதிப்படுத்துவார் என தாம் எதிர்பார்ப்பதாக இலங்கை தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (07) நடைபெற்ற இரண்டு "இயலும் ஸ்ரீலங்கா" வெற்றிப் பேரணிகளில் கலந்து கொண்ட பின்னர் காங்கேசன்துறையில் உள்ள மாவை சேனாதிராஜாவின் வீட்டிற்குச் சென்ற ஜனாதிபதி, அவருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

தனது இல்லத்திற்கு வருகை தந்த ஜனாதிபதியை மாவை சேனாதிராஜா அன்புடன் வரவேற்றார்.

இந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மாவை சேனாதிராஜா, ஜனாதிபதியுடனான சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலவரங்கள், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் வடக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நீண்ட காலமாக தீர்க்கப்படாத வடக்கில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் பாரிய பொறுப்பு உள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களை அபிவிருத்தி செய்து மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதாகவும் மாவை சேனாதிராஜா குறிப்பிட்டார்.

## வாக்குச்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மேலும், வாக்குச் சாவடிகளில் இடையூறு விளைவிப்பவர்கள் மற்றும் கலவரங்களில் ஈடுபடுபவர்களை உடனடியாகக் கைது செய்யுமாறும், தேர்தல்கள் ஆணைக்குழு பொலிஸாரை அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டு, சட்ட விரோத துப்பாக்கிகளை வைத்திருப்பவர்கள் மற்றும் பாதாள உலகக் கூட்டத்தினர் ஆகியோரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக விசேட குழுக்களும் நியமிக்கப்படவுள்ளதாக, பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்ற வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை, ஒரு கோடியே 70 இலட்சம் எனவும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு சுமார் 10 இலட்சம் புதிய வாக்காளர்கள் இணைந்துள்ளதாகவும், தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.




# SEPTEMBER 2024 INTAKE

## UK Endorsed Diploma Programs

- UK Diploma In Psychology and Counseling
- UK Diploma In Information Technology
- UK Diploma In Teacher Training
- UK Diploma In Business Management
- UK Diploma In Early Childhood Education
- UK Diploma In English

**10% Discount for the First 100 Students**

## UK Qualified HND Programs

- HND (UK) in Psychology and Counseling
- HND (UK) In Information Technology
- HND (UK) In Teacher Training
- HND (UK) In Business Management
- HND (UK) In English

### Recognitions

City & Guilds Approved Centre
bcs The Chartered Institute for IT
Skill Development Council Canada
BRITISH COUNCIL
IIC UNIVERSITY OF TECHNOLOGY
QUALIFI
Member of : FITIS

## TOP UP DEGREES

- Bachelor's of Education
- BA in English
- Bachelor's of Psychology
- Bachelor's of Business Admin (BBA)


IAU International Association of Universities · WHED World Higher Education Database · UGC RECOGNIZED · WES World Education Services APPROVED

**+94773 208 023**

AMAZON COLLEGE & CAMPUS
Where Success Begins

294, 2nd Floor Galle Road, Colombo-4.
+94112591110 / +94114386126
info@amazoncollege.lk
www.amazoncollege.lk

WHERE SUCCESS BEGINS · 15TH YEARS ANNIVERSARY



# ரணில் தோற்றால் என்ன நடக்கும்?

தேர்தல் பிரசாரங்கள் இப்போது உச்சத்தைத் தொட்டுள்ளன. முக்கியமாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,சஜித் பிரேமதாசா மற்றும் அனுரகுமார திஸாநாயக்க ஆகிய மூன்று வேட்பாளர் களிடையேதான் போட்டி நிலவுகிறது.

மொட்டு கட்சி வேட்பாளர் நாமல் ராஜபக்ச நான்காம் இடத்தில்தான் உள்ளார். அதனைத் தொடர்ந்து சரத் பொன்சேகா,திலித் ஜயவர்தன,விஜயதாச ராஜபக்ச ஆகியோர் உள்ளனர்.

இந்தத் தேர்தலில் முதல் மூன்று வேட்பாளர்களும் பல வாக்குறுதிகளை அள்ளிவீசி வருகின்றனர். அந்த வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேற்றப்படக் கூடியதுதானா என்பது சந்தேகமே.

அதேபோல்,தாம் தோல்வியடைந்தால் எப்படிப்பட்ட ஆபத்தெல்லாம் இந்த நாட்டுக்கு ஏற்படும் என்றெல்லாம் அவர்கள் கூறி வருகிறார்கள்.

அதில் ஒன்றுதான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தேர்தல் மேடைகளில் கூறி வரும் விடயம்.

இந்தத் தேர்தலில் தான் தோல்வியடைந்தால் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடைந்துவிடும் என்றும் வரிசை யுகம் தோன்றிவிடும் என்றும் அவர் எல்லா மேடைகளிலும் கூறி வருவதை அவதானிக்க முடிகிறது.

அது உண்மையா, அப்படி நடக்குமா என்ற கேள்வி இப்போது மக்கள் மனங்களில் எழுகிறது.

அப்படி நடப்பதாகவிருந்தால் ஒரேயொரு காரணத்தால் மாத்திரம்தான் நடக்கும்.

அது பொருளாதாரம் என்பது ரணிலோடு மாத்திரம் ஒட்டியிருக்கின்ற ஒன்றாக இருக்க வேண்டும். ரணிலுக்கு மாத்திரம் சொந்தமான ஒன்றாக இருக்க வேண்டும்.

அப்படி இருந்தால் மாத்திரம்தான் ரணில் போனால் அது ரணிலுடனேயே போகும். ரணில் வந்தால் அது ரணிலுடனேயே வரும்.

பொருளாதாரத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும் ரணிலின் தோல்வியிலும் தங்கியில்லைவெற்றியிலும் தங்கியில்லை..

இனி வருகின்ற ஜனாதிபதி எவ்வாறு நடந்துகொள்கிறாரோ அதில்தான் தங்கியுள்ளது.

திறமையாக செயற்பட்டால் எழும். கோத்தாபோல் கிறுக்குத்தனமாக செயற்பட்டால் விழும்.

2015 இல் மைத்திரி-ரணில் அரசு மஹிந்தவிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முன் வாழ்க்கைச் செலவீனம் அதிகரித்திருந்தது.

கைப்பற்றியதும் எரிபொருள்,சீனி மற்றும் பருப்பு உள்ளிட்ட 10 அத்தியாவசிய பொருட்களின் விலைகளை உடனடியாகக் குறைத்து வாழ்க்கைச் செலவீனத்தை ஒரு நல்ல நிலைமைக்குள் கொண்டு வந்தனர்.

ஆனால்,ஆட்சியைக் கைப்பற்றி இரண்டு மாதங்களில் மத்திய வங்கி கொள்ளை இடம்பெற்றதால் மீண்டும் பொருளாதாரம் ஆட்டங்காணத் தொடங்கியது.

2019இல் கோத்தா ஆட்சியைக் கைப்பற்றியபோதுகூட சாதாரண நிலைமையே இருந்தது.பிறகு அவர் பார்த்த மேதாவித்தனமான-கிறுக்குத்தனமான வேலையால்தான் பொருளாதாரம் வீழ்ந்தது.

எதுவித மாற்றங்களும் செய்யாமல் ஓடிக்கொண்டிருந்த நாட்டை அப்படியே ஓடவிட்டு சும்மா பார்த்துக்கொண்டு இருந்திருந்தால்கூட நாடு தப்பி இருக்கும்.

இதிலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் பொருளாதாரம் வீழ்வதும் எழுவதும் வருகின்ற ஆட்சியாளர் பார்க்கின்ற வேலையால்தான் என்பதாகும்.

கோத்தா விரட்டப்பட்டதன் பின் ஜனாதிபதி பதவியைக் கைப்பற்றிய ரணில் சர்வதேச நாணய நிதியத்திடம் சென்று கடன் வாங்கியும் வெளிநாட்டு கடன்களை செலுத்துவதை நிறுத்தியுமே வரிசை யுகத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

இந்த வேலையை கோத்தாவே செய்திருக்கலாம்.அதுவும் ஆரம்பத்திலேயே செய்திருக்க வேண்டும். அப்படி செய்திருந்தால் நாணய நிதியத்தை நிபந்தனைகளும் கடுமையாக இருந்திருக்காது.இந்த வரிசை யுகம் ஏற்பட்டிருக்காது.

இதை கோத்தா செய்யத் தவறியது ஏன் ? அவரது ஆட்சிக்குள் இது தொடர்பில் இரண்டு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.ஒரு தரப்பு நாணய நிதியத்திடம் போக வேண்டும் என்றது.இன்னொரு தரப்பு போகக்கூடாது என்றது.

இதனால் போவதா,இல்லையா என்று யோசித்துக்கொண்டு இருக்கும்போதே வெள்ளம் தலைக்கு மேல் வந்துவிட்டது.

ஆகவே, பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் ஆட்சி மாற்றம் காரணமல்ல.ஆட்சியைக் கைப்பற்றுகிறவர் எடுக்கின்ற முடிவில்தான் எல்லாம் தங்கியுள்ளது.

**பொருளாதாரத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும் ரணிலின் தோல்வியிலும் தங்கியில்லை வெற்றியிலும் தங்கியில்லை. இனி வருகின்ற ஜனாதிபதி எவ்வாறு நடந்துகொள்கிறாரோ அதில்தான் தங்கியுள்ளது. திறமையாக செயற்பட்டால் எழும். கோத்தாபோல் கிறுக்குத்தனமாக செயற்பட்டால் விழும்.**

## COMPLAST & RUBEXPO 2024



முழுமையான பிளாஸ்டிக் பொருட்கள் கண்காட்சி மற்றும் இறப்பர் எக்ஸ்போ (**COMPLAST & RUBEXPO 2024**) நிகழ்வானது ஓகஸ்ட் 30 முதல் செப்டம்பர் 1 ஆம் திகதி வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

**SMART Expos & Fairs India Pvt Ltd** மற்றும் இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (**PRISL**) ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வுக்கு **Industrial Development Board (IDB)** ஆதரவு வழங்கியது.

**Shibaura Machine India, SDD Polymers, Lanka IOC, FMJ Plastics, Acteil Innovative** மற்றும் **NCS Holdings** ஆகியன இந்நிகழ்வின் பிரதான அனுசரணையாளர்களாகும்.

மூன்று நாட்கள் இடம்பெற்ற இக் கண்காட்சியில், பிளாஸ்டிக், இறப்பர் மற்றும் பொதியிடல் உள்ளிட்ட துறைகளில் இருந்து 200க்கும் மேற்பட்ட தொழில் வல்லுநர்கள் மற்றும் 200க்கும் மேற்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த இரட்டைக் கண்காட்சிக்கு வருகை தந்திருந்தோர், பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் தொழிற்துறைகளின் நவீன தயாரிப்புகள், தொழில்நுட்பங்கள் மற்றும் புத்தாக்கங்கள் ஆகியவற்றை பார்வையிட்டதுடன், அதிநவீன தீர்வுகளின் பல்வேறு நேரடி விளக்கங்களையும் பெற்றுக் கொண்டனர்.

## DFCC வங்கியின் Mintpay



இலங்கையில் டிஜிட்டல் நிதியியல் சேவைகளை வழங்குவதில் முன்னோடியான **DFCC** வங்கி, நாட்டிலுள்ள முதன்மை நிதியியல் செயலியான **(app), Mintpay** உடன் மூலோபாய கூட்டாண்மை யொன்றை முன்னெடுப்பது குறித்து அறிவித்துள்ளது. இக்கூட்டாண்மை மூலமாக, சந்தையில் பொதுவாகப் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு வசதியாகக் காணப்படுகின்ற **"Buy-Now-Pay-Later" (BNPL)** மற்றும் **"Pay Now"** போன்ற தனித்துவமான கொடுப்பனவுத் தெரிவுகள் டெபிட் அட்டைதாரர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**DFCC** வங்கியின் இணைய வழி கொடுப்பனவு நுழைமுகத்தை **Mintpay** உடன் ஒருங்கிணைப்பதன் மூலமாக, டெபிட் அட்டைதாரர்கள் அனைவருக்கும் நிதியியல் நெகிழ்திறனை மேம்படுத்தி, நிதித் துறையில் புரட்சிகரமான மாற்றத்திற்கு நாம் வழிகோலவுள்ளோம்.

**DFCC** வங்கி தனது டெபிட் அட்டைதாரர்களுக்கு **BNPL** க்கான கவர்ச்சிகரமான தெரிவுகளை வழங்கும் அதேசமயம், வங்கியின் இணையவழி கொடுப்பனவு நுழைமுகம் மற்றும் அவற்றை ஏற்றுக்கொள்ளும் விரிவான வலையமைப்பின் அனுகூலத்தின் பயனை **Mintpay** அனுபவிக்கும்.

அந்த வகையில், எந்தவொரு டெபிட் அட்டைதாரரும் தற்போது **"Pay Now"** அல்லது **"BNPL"** தெரிவைக் கொண்டிருப்பதுடன், **Mintpay** மூலமாக இணையவழி மற்றும் விற்பனை மையங்களில் தாம் மேற்கொள்கின்ற கொள்வனவுக்கு செலவிடுகின்ற தொகையை வட்டியின்றிய, மூன்று தவணைக் கொடுப்பனவுகளாக செலுத்த முடியும்.

# பங்குச் சந்தையில் LTL HOLDINGS LIMITED




40 வருட கால அனுபவத்தைக் கொண்ட, இலங்கையின் பன்முகப்படுத்தப்பட்ட, ஒன்றிணைக் கப்பட்ட வலுத்துறையில் முன்னணி நிறுவனமாகிய **LTL Holdings Limited** ஆரம்ப பொது பங்கு வழங்கல் குறித்து அறிவித்துள்ளதுடன், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடுள்ளது.

மேலும், இப்பட்டியலிடலானது, கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் முன்னெடுக்கப்படவுள்ள மாபெரும் ஆரம்ப பொது பங்கு வழங்கலாக அமைந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆரம்ப பொது பங்கு வழங்கலினூடாக, பங்கொன்றுக்கு ரூ. 14.50 வீதம் 1,379,310,400 புதிய சாதாரண வாக்குரிமை பங்குகள் வெளியிடப்படவுள்ளதுடன், அதன் ஆரம்ப மொத்த மதிப்பு ரூ. 16 பில்லியனாக அமைந்திருக்கும்.

ஆரம்ப பொது பங்கு வழங்கலினூடாக இந்தப் பெறுமதியை ரூ. 20 பில்லியனாக உயர்த்துவதற்கும், பொது மக்களுக்கு **LTL** நிறுவனத்தின் 22.3% உரிமையாண்மையை பெற்றுக் கொடுப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஆரம்ப பொது பங்கு வழங்கல் 2024 செப்டெம்பர் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதுடன், பங்கு கொள்முதலுக்கான விண்ணப்பங்கள் தற்போது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

ஆரம்ப பொது பங்கு வழங்கலிலிருந்து பெறப்பட்ட தொகையில், ரூ. 13.5 பில்லியன், கெரவலபிட்டிய பகுதியில் (சஹாஸ்தனாவி லிமிடெட்) 350 ஆறு இணைந்த சுழற்சி வலுப் பிறப்பாக்கல் ஆலையை நிர்மாணிப்பதற்கான முதலீடாக பயன்படுத்தப்படும்.

## Tata Motors GenVoltz ஜெனரேட்டர்கள் சந்தையில்

இலங்கையின் முன்னணியில் உள்ள பல்வகைத்துறை கூட்டு நிறுவனமான **DIMO**, இலங்கைச் சந்தையில் **Tata Motors GenVoltz** ஜெனரேட்டர்களை அண்மையில் அறிமுகப்படுத்தியது.

**25kVA, 30kVA, 35kVA, 40kVA, 50kVA, 62.5kVA, 82.5kVA, 100kVA, 125kVA** மாதிரிகளில் அமைந்த **GenVoltz** மின்பிறப்பாக்கிகள் (ஜெனரேட்டர்கள்), கட்டடங்களின் பராமரிப்பு சேவைகள், சுகாதார சேவைகள், சுற்றுலா, தொழில்நுட்பம் போன்ற சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்களின் மின்சக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவும் தயாரிப்பாகும்.




இந்த மின்பிறப்பாக்கிகளின் விசேட செயல்திறன் மற்றும் எரிபொருள் திறன் ஆகியன, அவற்றின் நீண்ட ஆயுளை உறுதி செய்வதோடு தடையின்றிய மின்சாரம் அவசியமான வணிகங்களுக்கு சிறந்த தெரிவாக அமைகின்றன.

இந்த அறிமுகம் குறித்து கருத்துத் தெரிவித்த **DIMO** நிறுவனத்தின் பிரதம செயற்பாட்டு அதிகாரி (வாகன பொறியியல் தீர்வுகள்) மஹேஷ் கருணாரத்ன தெரிவிக்கையில், அண்மையில் ஏற்பட்ட மின்சக்தி நெருக்கடியுயைத் தொடர்ந்து நம்பகமான மேலதிக மின்சக்தித் தீர்வுகளுக்கான தேவை சந்தையில் அதிகரித்துள்ளது.

அந்தத் தேவையை மையமாகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தீர்வே இந்த ஜெனரேட்டர்களாகும். **Tata Motors** நிறுவனத்தின் மேம்பட்ட பொறியியல் தொழில்நுட்பத்துடனும், **DIMO** நிறுவனத்தின் ஒப்பிட முடியாத விற்பனைக்குப் பின்னரான சேவைகளுடன் சந்தைக்கு வரும் **Tata Motors GenVoltz** ஜெனரேட்டர்கள், நாட்டின் மின் உற்பத்தித் துறைக்கு புதிய ஆற்றலை சேர்க்கிறது." என்றார்.

# கட்புல -செவிப்புலனற்றோருக்கான பாடசாலைக்கு அனுசரணை



கட்புல மற்றும் செவிப்புலனற்றோரை ஊக்கப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட செலான் வங்கியின் 'Signfluencer' பிரச்சாரம் செவிப்புலன் குறைவாக உள்ளவர்களை அங்கீகரிக்க வேண்டியதன் அவசியத்தை வெளிக் கொணர்ந்ததன் மூலம் அதன் பயணத்தை ஆரம்பித்தது. வளர்ச்சிக்கான ஊக்குவிப்பாக, செலான் வங்கியின் அடுத்தகட்ட பிரச்சாரமானது இரத்மலானையில் உள்ள இலங்கை கட்புல மற்றும் செவிப்புலனற்றோரிற்கான பாடசாலைக்கான ஆதரவுடன் தொடருகிறது.பாடசாலையில் பார்வையற்ற மாணவர்களின் கணினி அறிவாற்றலை மேம்படுத்துவதன் மூலம் அவர்களை ஊக்கப்படுத்துவதே இலக்காகும். இதன் பொருட்டு, செலான் வங்கி, பயிற்றுனர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நிதியுதவி வழங்குவதன் மூலம் இதனை நடைமுறைப்படுத்தும். அன்புடன் அரவணைக்கும் வங்கி என்ற வகையில், சமூகத்தின் அனைத்து தரப்பினரையும் உள்வாங்குதலை செலான் வங்கி மிக முக்கியமாக கருதுகின்றது.

# பீப்பள்ஸ் லீசிங் இன் புதிய நிறைவேற்று அதிகாரி



இலங்கையில் வங்கி அல்லாத நிதியியல் சேவை நிறுவனங்களில் முன்னிலை வகித்து வருவதுடன், மக்கள் வங்கியின் துணை நிறுவனங்களில் ஒன்றாகவும் திகழ்ந்து வருகின்ற பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, தனது புதிய பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பொது முகாமையாளராக திரு. சஞ்சீவ பண்டாரநாயக்க அவர்களை நியமனம் செய்துள்ளமை குறித்து அறிவித்துள்ளது.
2024 ஆகஸ்ட் 6 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் இடம்பெற்றுள்ள துடன், இலங்கை மத்திய வங்கியின் அனுமதியும் இதற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.
36 ஆண்டுகளுக்கும் மேலான ஆழமான அனுபவத்தைக் கொண்டுள்ள திரு. பண்டாரநாயக்க அவர்கள், குறிப்பாக 31 ஆண்டுகளாக வங்கி அல்லாத நிதியியல் நிறுவனங்கள் துறையில் அனுபவத்தைக் கொண்டுள்ளார். 2007 இல் பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சியில் நிதி மற்றும் நிர்வாகத் துறைக்கான பிரதிப் பொது முகாமையாளராக இணைந்த அவர், நிதி, திறைசேரி, நிர்வாகம், மனிதவளங்கள், தகவல் தொழில்நுட்பம், கடன் மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற பல்வேறுபட்ட மூலோபாயச் செயல்பாடுகளை முன்னெடுப்பதில் தீவிரமாக உழைத்துள்ளார்.

# முன்னோக்கி கொண்டு செல்லும் DIMO




வாகனத் துறையில் முன்னோடியும், இலங்கையில் Mercedes -Benz இன் பிரத்தியேகமான அங்கீகரிக்கப்பட்ட பொது விநியோகஸ்தருமான DIMO நிறுவனமானது, உயர்ந்த நெறிமுறை தரநிலைகள் மற்றும் தேசிய விதிமுறைகளுக்கு இணங்கியவாறு, Mercedes -Benz EQ வகைகள் மூலம் ஆடம்பர வாகனச் சந்தையில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்துகிறது. நிலைபேறான போக்குவரத்தில் முன்னணியில் உள்ள DIMO நிறுவனமானது, Mercedes -Benz EQA 350 4MATIC, EQE 350 4MATIC SUV, EQS 450+, Mercedes -AMG EQS 53 4MATIC ஆகிய வாகன மாதிரிகளை வெற்றிகரமாக இலங்கைக்கு இறக்குமதி செய்து, அறிமுகப்படுத்தி, விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன், விரைவில் இறக்குமதி செய்யப்படவுள்ள Mercedes-Benz EQB 250, EQE 350+, EQS 450 4MATIC SUV மூலம், நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மத்தியில் மின்சார வாகன (EV) பிரிவில் முன்னோடியாக தனது நிலையை DIMO நிறுவனம் நிலைநிறுத்த முடியும்.
அத்துடன், Mercedes-Benz EQB 250, EQE 350+ மற்றும் EQS 450 4MATIC SUV ஆகியன சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், DIMO ஆனது இலங்கையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மத்தியில் மின்சார வாகனத் துறையில் (EV) முன்னோடி எனும் வகையில் தனது நிலையை நிலைநிறுத்த முடிந்துள்ளது.

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு DIMOவின் தரவு பகுப்பாய்வு தொகுதி



இலங்கையின் முன்னணியில் உள்ள பல்துறை கூட்டு நிறுவனமான DIMO நிறுவனத்தின் சுகாதாரப் பிரிவான DIMO Healthcare நிறுவனம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் Siemens Healthineers 3 Tesla MRI ஸ்கேனருக்கு, மேலதிக கணனி தரவுப் பகுப்பாய்வு தொகுதியை (Workstation) நன்கொடையாக வழங்கியுள்ளது.
MRI அறிக்கைகளைப் பெறுவதற்கும், இதன் மூலம் நோயறிதல் செயன்முறையை விரைவுபடுத்துவதற்கும், உடனடியாக சிகிச்சையைத் திட்டமிடுவதற்கும் இது மிகவும் உதவியாக அமையும்.
DIMO Healthcare நிறுவனம் 2020 இல் யாழ். போதனா வைத்தியசாலையில் Siemens Healthineers 3 Tesla MRI ஸ்கேனரை நிறுவியது. யாழ். மாவட்டத்தின் பொதுச் சுகாதார சேவை கட்டமைப்பில் உள்ள ஒரேயொரு MRI ஸ்கேன் இயந்திரமான இது பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்குகிறது. நோயறிதல் செயன்முறையை விரைவுபடுத்துமாறு யாழ் போதனா வைத்தியசாலையினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க, மருத்துவமனையின் MRI ஸ்கேன் இயந்திரத்திற்காக இந்த மேலதிக கணனி தரவு பகுப்பாய்வு தொகுதியை (Workstation) DIMO Healthcare வழங்கியது.

# யூனியன் அஷ்யூரன்ஸ் உறுதியான நிதிப் பேறு

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், 2024 முதல் அரையாண்டு காலப்பகுதியில் உறுதியான நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது. பிரதான அளவுகோல்களில் உறுதியான வளர்ச்சி மற்றும் வினைத்திறனை பதிவு செய்துள்ளது.

2024 ஆம் ஆண்டில் யூனியன் அஷ்யூரன்ஸ் தேறிய கட்டுப்பண வழங்கல் ரூ. 9.8 பில்லியனாக உயர்ந்திருந்தது.

2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 16மூ வளர்ச்சி என்பது குறிப்பிடத்தக்கது. அனைத்து இலங்கையர்களின் ஆயுளை பாதுகாப்பது மற்றும் நலனுக்கு வளமூட்டுவது எனும் தனது நோக்கத்தின் பிரகாரம், ரூ.3.3 பில்லியனை உரிமைகோரல்களாக




பதிவு செய்து காப்புறுதி தாரர்களுக்கான தமது அர்ப்பணிப்பை நிறுவனம் மீளுறுதி செய்திருந்தது. ஆண்டில் ரூ. 5.7 பில்லியனை தேறிய முதலீட்டு வருமானமாக நிறுவனம் பதிவு செய்திருந்தது. 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 11% வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. யூனியன் அஷ்யூரன்ஸின் வினைத்திறனான சொத்துகள் ஒதுக்கீடு மூலோபாயம், குறைந்த வட்டி வீதத்துடனான சூழல் ஆகியவற்றில் இதனை பிரதிபலித்திருந்தது.

2024ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் நிறுவனத்தின் நிர்வாகத்தின் கீழான சொத்துகள் ரூ. 86.6 பில்லியனாக பதிவாகியிருந்தது. மேலும், மூலதன போதுமை விகிதம் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டை விட உயர்ந்த மட்டத்தில் பேணப்பட்டிருந்தது. சந்தை மூலதனவாக்கமும் உறுதியான வளர்ச்சியை பதிவு செய்து, 22% இனால் உயர்ந்து ரூ. 28.6 பில்லியனாக பதிவாகியிருந்தது. உயர்ந்த முதலீட்டாளர் நம்பிக்கை மற்றும் நேர்த்தியான சந்தை நோக்கு ஆகியவற்றை பிரதிபலித்திருந்தது.

# நவீன எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சை

## BONE MARROW TRANSPLANTS



இலங்கையர்களுக்கு உயர்தர சர்வதேச சுகாதார சேவைகளை வழங்கும் நவலோக்க மருத்துவமனைகள் குழுமம், விசேட எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சை பிரிவை நவீனமயப்படுத்தி அண்மையில் மீண்டும் திறந்து வைத்துள்ளது.

இரத்த புற்றுநோய் மற்றும் தலசீமியா போன்ற இரத்த சம்பந்தமான நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க நிறுவப்பட்டது, அந்த நோய்களுக்கான வெற்றிகரமான சிகிச்சை முறையான எலும்பு மஜ்ஜை அல்லது ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. செப்டம்பர் 2014 முதல் செயல்படும், BMTU அலகு விரிவான எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சை சேவைகளை வழங்க நவீன தொழில்நுட்பம் மற்றும் வசதிகளைப் பயன்படுத்துகிறது.

எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சையில் சிறப்புப் பயிற்சி பெற்ற திறமையான மற்றும் அனுபவம் வாய்ந்த சுகாதார நிபுணர்களின் குழுவையும் கொண்டுள்ளது.

# கண்கவர் ஷொப்பிங் அனுபவம்

உலகின் முன்னணி வாழ்க்கைமுறை பயன்பாட்டு பொருட்கள் விற்பனை வர்த்தகநாமங்களில் ஒன்றான ஆலைனைழ, முன்னரை விட உங்கள் வாழ்க்கையை மிகவும் வசதியாகவும் மகிழ்ச்சியாகவும் மாற்றுவதற்கான அர்ப்பணிப்பில் உள்ளது.

வாழ்க்கையைப் பற்றிய புத்துணர்ச்சி யூட்டும் புதிய கண்ணோட்டத்துடன், இலங்கை வாடிக்கையாளர்களுக்கு இரு மடங்கு வேடிக்கை மற்றும் உற்சாகத்தை Miniso வழங்குகிறது.

இலங்கையில் Miniso நிறுவனத்தின் முதன்மை உரிமையாளரான அபான்ஸ் நிறுவனம், நாடு முழுவதும் சிறந்த விஸ்தரிப்புத் திட்டத்துடன் அதனை மேம்படுத்தி வருகிறது. நாடளாவிய ரீதியில் ஏற்கனவே 10 இற்கும் மேற்பட்ட காட்சியறைகள் கொண்டுள்ள Miniso, தனித்துவமான ஷொப்பிங் அனுபவத்தை நுகர்வோருக்கு வழங்கும் புதிய திட்டத்துடன் அதன் செயற்பாட்டை இரட்டிப்பாக்குகிறது.


Miniso எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டது அல்ல, அது தரத்தை அடிப்படையிலானதாகும்! அதன் பரந்த தயாரிப்பு வகைகள் அனைவருக்கும், குறிப்பாக




இளைஞர்களுக்கு, வசதி, பேஷன், தூய்மையான பொழுதுபோக்கு ஆகியவற்றின் கலவையை வழங்குகிறது.

## TikTokஇன் தொழில்முனைவோர்

# செயலமர்வு




2024, செப்டம்பர், இலங்கை – இலங்கையில் உள்ள சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் நோக்கில் TikTok அண்மையில் நடத்திய செயலமர்வு மிகவும் வெற்றிகரமாக நிறைவடைந்தது. #GrowWithTikTok Masterclass என்று பெயரிடப்பட்ட இந்த செயலமர்விற்கு, தங்களது வணிகங்களை வளர்த்துக் கொள்வதற்கு TikTok தளத்தை எவ்வாறு பயன்படுத்துவது குறித்து அறிந்துகொள்ள, சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் உரிமையாளர்கள், சந்தைப்படுத்தல் நிபுணர்கள் மற்றும் தொழில்முனைவோர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். அத்துடன், தமது வணிகங்களின் நாமத்தை விளம்பரப்படுத்தவும், இளைஞர்களுடன் இணைந்து செயல்படவும் மற்றும் தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் படைப்பாற்றலை வெளிப்படுத்தவும் TikTok இன் தனித்துவமான அம்சங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்த சிறப்புப் பயிற்சியைப் பெறும் வாய்ப்பு இந்த செயலமர்வில் பங்குபற்றியவர்களுக்கு கிடைத்தது.

# உலகளாவிய பாடும் நட்சத்திரங்கள் Hot ‘N’ Spicy உடன் இணைவு

இலங்கை இளைஞர்களின் அதிர்வலை மற்றும் கேளிக்கையைத் தொடர்ந்தும் முன்னெடுக்க பிரிமா கொத்துமீ ஒருபோதும் தவறுவதில்லை.

சர்வதேச சூப்பர் ஸ்டாரான யொஹானி மற்றும் பாடகர் அஷன்யா பிரேமதாச ஆகியோரை தனது வர்த்தகநாமத் தூதுவர்களாக இணைத்துள்ள பிறிமா கொத்துமீ, அவர்களுடனான கூட்டாண்மையை மேலும் நீடிப்பதாக அறிவித்துள்ளதன் மூலம், தனது தனித்துவமான ஆளுமையை வலுப்படுத்தியுள்ளது.

பிறிமா கொத்துமீயின் Hot ‘N’ Spicy நாமத்தின் உணர்வை, முழுமையாக வெளிப்படுத்த இவர்களை விட சிறந்த ஜோடி இருக்கமாட்டார்கள்.

பிறிமா கொத்துமீயின் பரபரப்பான




அடுத்த அத்தியாயமாக இணைகின்றார் கொலிவுட் இசை அரங்கில் அலைகளை உருவாக்கிய பிரபல இலங்கை கலைஞரான ரவி ரொய்ஸ்டர். Hot ‘N’ Spicy அதிர்வைப் போல் ரவி தனது இசையை புதிய உயரத்திற்கு கொண்டு செல்கிறார். நாடு முழுவதிலும் உள்ள இளைஞர்களை தைரியமாக முன்னோக்கிச் செல்லச் செய்யவும், வாழ்க்கையின் வண்ணங்களை அனுபவிக்கவும் ஊக்கமளிக்கும் பிறிமா கொத்துமீ அதன் வர்த்தகநாம மந்திரத்தை மேலும் அதிகரிக்கும் வகையில், உலகளாவிய நட்சத்திரங்களுடன் தொடர்ச்சியாக இணையும்.